ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2142 - 2019 සැප්තැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2019.09.20
*2142 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பதவிகள் - வெற்றிடம் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1596 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தம்) சட்டமூலம், 2019, செத்தெம்பர் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2019, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

*மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழிநுட்ப சேவையிலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2019*

*மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையில் விவசாய போதனாசிரியர் தரம் III, கால்நடை வள அபிவிருத்தி ஆலோசகர் தரம் III மற்றும் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III ஆகிய பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மத்திய மாகாணத்தில் வசிக்கும் தகைமையுடைய ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**1. பொதுவான தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.2 விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2019.10.04) உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். (விண்ணப்பதாரர் மத்திய மாகாணத்தில் 03 வருடங்களுக்குக் கூடிய நிரந்தர வதிவினைக் கொண்ட வாழ்க்கைத் துணையினைக் கொண்டிருப்பின் அதுபற்றி கவனத்திற் கொள்ளப்படும்.)

1.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று (2019.10.04) 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே மத்திய மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று.)

1.4 சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

1.5 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**2. கல்வி மற்றும் தொழில்நுட்பத் தகைமைகள்**

அனைத்து கல்வி மற்றும் தொழில்நுட்பத் தகைமைகளை 2019.09.27 ஆந் திகதிக்குப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| | பதவி | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | தொழில்நுட்பத் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | விவசாய போதனாசிரியர் தரம் III | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | உயிரியல், இரசாயனவியல், விவசாயம், விலங்கியல், தாவர வியல், உயிரியல்முறைமைத்தொழில் நுட்பம், தொழில்நுட்பத்துக்கான அறிவியல் ஆகிய பாடங்களில் 02 பாடங்கள் உட்பட விஞ்ஞானம்/ தொழில்நுட்பப் பிரிவில் (பொது வினாத்தாள்/ஆங்கிலம் தவிர்ந்த) அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் அல்லது பழைய பாடத்திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட 02 பாடங் களுட்பட 03 பாடங்களில் சித்தி யடைந்திருத்தல். | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் வகையில் தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 06 இற்கான உரிய துறையில் தகுதிச் சான்றிதழினைப் பெற்றிருத்தல்.<br>1. குண்டசாலை, அகுணகொல பெலெஸ்ஸ, பெல்வெஹெர, பிபில, லபுதுவ, வாரியபொல, வவுனியா, அநுராதபுரம், கரபிஞ்ச ஆகிய விவசாய பாடசாலைகளினால் வழங்கப்படும் இருவருட டிப்ளோமா சான்றிதழ்.<br>அல்லது<br>2. ஹாடி தொழில்நுட்ப நிறுவனத்தி னால் வழங்கப்படும் விவசாயம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ்.<br>அல்லது |

*கல்வி மற்றும் தொழில்நுட்பத் தகைமைகள் (தொடர்ச்சி)*

| | *பதவி* | *க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்* | *க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்* | *தொழில்நுட்பத் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| | | | | 3. எக்வைனாஸ் கல்லூரியினால் வழங்கப்படும் விவசாய டிப்ளோமா சான்றிதழ்<br><br>அல்லது<br><br>4. அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் இரு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் |
| 2 | குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | உயிரியல், இரசாயனவியல், விவசாயம், விலங்கியல், தாவர வியல், உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம், தொழில்நுட்பத் துக்கான அறிவியல் ஆகிய பாடங்களில் 02 பாடங்கள் உட்பட விஞ்ஞானம்/ தொழில்நுட்பப் பிரிவில் (பொது வினாத்தாள்/ ஆங்கிலம் தவிர்ந்த) அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் அல்லது பழைய பாடத்திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட 02 பாடங் களுட்பட 03 பாடங்களில் சித்தி யடைந்திருத்தல். | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் வகையில் உரிய துறையில் தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 05 அல்லது 06 இற்கான தகுதிச் சான்றிதழினைப் பெற்றிருத்தல்.<br><br>1. குண்டசாலை, அகுணகொல பெலெஸ்ஸ, பெல்வெஹெர, பிபில, லபுதுவ, வாரியபொல, வவுனியா, அநுராதபுரம், கரபிஞ்ச ஆகிய விவசாய பாடசாலையினால் வழங் கப்படும் இருவருட டிப்ளோமா சான்றிதழ்.<br><br>அல்லது<br><br>2. ஹாடி தொழிநுட்ப நிறுவனத்தி னால் வழங்கப்படும் விவசாயம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ்.<br><br>அல்லது<br><br>3. எக்வைனாஸ் கல்லூரியினால் வழங்கப்படும் விவசாய டிப்ளோமா சான்றிதழ்<br><br>அல்லது<br><br>4. அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் இரு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் |
| 3 | கால்நடை வள அபிவிருத்தி ஆலோசகர் தரம் III | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | உயிரியல், இரசாயனவியல், விவசாயம், விலங்கியல், தாவர வியல், உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம், தொழில்நுட்பத் துக்கான அறிவியல் ஆகிய பாடங்களில் 02 பாடங்கள் உட்பட விஞ்ஞானம்/ தொழில்நுட்பப் | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் வகையில் உரிய துறையில் தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 05 அல்லது 06 இற்கான தகுதிச் சான்றிதழினைப் பெற்றிருத்தல். |

கல்வி மற்றும் தொழில்நுட்பத் தகைமைகள் (தொடர்ச்சி)

| பதவி | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | தொழில்நுட்பத் தகைமைகள் |
|---|---|---|---|
| | | பிரிவில் (பொது வினாத்தாள்/ ஆங்கிலம் தவிர்ந்த) அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் அல்லது பழைய பாடத்திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட 02 பாடங்களுட்பட 03 பாடங்களில் சித்தியடைந் திருத்தல். | 1. வெலிசர இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலையினால் வழங்கப்படும் இருவருட டிப்ளோமா சான்றிதழ். அல்லது 2. அநுராதபுர/சிப்பிக்குளம் கால் நடை வளர்ப்பு பயிற்சி நிலையத் தினால் வழங்கப்படும் இருவருட டிப்ளோமா சான்றிதழ். அல்லது 3. கரதகொல்லை இலங்கை கால் நடைவளர்ப்பு பாடசாலையினால் வழங்கப்படும் இரு வருட டிப்ளோமா சான்றிதழ். |

3. **சம்பள அளவுத் திட்டம் :**

3.1 பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 இற்கமைய சம்பள அளவுத்திட்டம் (MN 3 - 2016), ரூபா 31,040 - 10x445 - 11x660 - 10x730 - 10x750 - ரூபா 57,550 ஆகும். 2016.02.25 ஆந் திகதி வெளியிடப்பட்ட பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் உப அட்டவணை II இன் ஏற்புகளுக்கமைய சம்பளம் வழங்கப்படும்.

4. **ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :**

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இப்பதவியுடன் தொடர்புடைய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

5. **ஆட்சேர்ப்பு முறை :**

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகளுள் திறமையின் அடிப்படையில் சான்றிதழ்கள் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு பின்னர் அரசாங்க நிருவாக சுற்று நிருபம் 15/90 இற்கமைய மாவட்ட சனத்தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தெரிவு செய்யப்படுவர். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. அத்துடன் எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் தனித்தனியாக குறைந்தது 40% புள்ளிகளைப் பெறாத விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்வதற்காக கவனத்தில் கொள்ளப்பட மாட்டார்கள். ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளின் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பிற்கான முந்துரிமை அட்டவணை தயாரிக்கப்படும்.

6. **சேவை நிபந்தனைகள் :**

6.1 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதும் ஆகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

6.2 அரச கரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

6.3 இந்நியமனப் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளும் எத்தகைய வேண்டுகோள்களும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அத்துடன், நியமிக்கப்படும் சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்ற திகதியிலிருந்து ஆகக்குறைந்தது 03 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றல் வேண்டும்.

7. **பரீட்சை முறை :**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

(இ) பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

8. **பரீட்சை செயற்திட்டம் :**

இப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பதாரிகள் கீழ்க் குறிப்பிட்டுள்ள பரீட்சை செயற்றிட்டத்தின் கீழ் எழுத்து மூலப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

I. உளச்சார்பு : (ஒரு மணித்தியாலம்) (100 புள்ளிகள்)

இவ்வினாத்தாள் முறன்பாட்டுக்கான தீர்வு, தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், நேர முகாமைத்துவம் போன்றவை தொடர்பான அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்படும் வினாக்களைக் கொண்டதாகும். அனைத்து விண்ணப் பதாரர்களும் இப்பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

II. தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம் : (காலம் 03 மணித்தியாலங்கள்) (100 புள்ளிகள்)

துறை சார் தொழில்நுட்ப அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களையும் அமைப்புக் கட்டுரை களையும் உள்ளடக்கிய வினாக்களையும் கொண்டதாகும்.

(அ) **மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையில் விவசாய போதனாசிரியர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பாடவிதானம் பின்வருமாறு :**

பதவிசார் தொழில்நுட்ப அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாகும். பாடவிதானம் பின்வருமாறு :

1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு
2. இலங்கையின் காலநிலை வலயங்கள் தொடர்பான அறிவு
3. மண் மற்றும் தாவரப் போசணைகள்
4. நெல் உற்பத்தி
5. ஏனைய களப் பயிர்கள் உற்பத்தி
6. காய்கறி உற்பத்தி
7. பழப்பயிர் உற்பத்தி
8. பயிர் பாதுகாப்பு
9. மண் இரசாயனம், மட்பாதுகாப்பின் முக்கியத்துவம், மட்பாதுகாப்பு முறைகள்
10. நீர்ப்பாசன முறைகள், நீர் முகாமைத்துவம்
11. பண்ணை இயந்திரமயமாக்கல்
12. தேனீ வளர்ப்பு
13. மலர் வளர்ப்பும் தரை அலங்காரப்படுத்தலும்
14. பாதுகாப்புப் பயிர் வளர்ப்பு
15. கால்நடை வளர்ப்பு
16. விவசாய விரிவாக்கல்
17. இழைய வளர்ப்பு
18. பயிர் தொற்றுத் தடைக்காப்பு (Plant Quarantine)
19. தாவரப் பேணுகை
    I. தாவரப் பேணுகையின் முக்கியத்துவம் (தாவரம்/முதலுருப்பரம்பரையலகு)
    II. தாவரப் பேணுகை முறைகள் (தாவரம்/முதலுருப்பரம்பரையலகு)
20. மரபணுத் தொழில்நுட்பம்
21. விவசாய அபிவிருத்தி
22. நிகழ்கால விவசாய அபிவிருத்திக் கொள்கைகள், அதன் முக்கியத்துவம், விவசாய அபிவிருத்தித் திட்டங்கள், விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய விவசாய அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள், மத்திய அரசாங்க விவசாயத் திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள், நிலையங்கள், பிரிவுகள் மற்றும் அதன் தொழிற்பாடுகள், விவசாயத்துறையின் தற்போதைய பிரச்சினைகள் சவால்கள் தேசிய பொருளாதாரத்தில் விவசாயத்தின் பங்களிப்பு.

(ஆ) **மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையில் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III இற்குரிய பாடவிதானம் பின்வருமாறு**

1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு
   i. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு
   ii. வேலைவாய்ப்பு
   iii. விவசாய ஏற்றுமதி இறக்குமதி
2. இலங்கையின் காலநிலை வலயங்கள் தொடர்பான அறிவு
3. மண் மற்றும் தாவரப் போசணைகள்
   i. மண்ணின் கட்டமைப்பு, இழையமைப்பு, மண்ணின் பௌதீக இரசாயன உவர்த்திறன், பயிர்ச் செய்கையில் அதன் தாக்கம்
   ii. தாவரப் போசணை, மண் மற்றும் தாவரப் போசணை முகாமைத்துவம்
   iii. பயிர்ப் போசணையின் விசேட அம்சங்கள்
4. மண் இரசாயனம், மட்பாதுகாப்பின் முக்கியத்துவம், மட்பாதுகாப்பு முறைகள்
5. நீர் முகாமைத்துவமும் நீர்ப்பாசன முறைகளும்
   i. வெவ்வேறு பயிர்களுக்குப் பொருத்தமான நீர்ப்பாசன முறைகளும் அதன் நீர் முகாமைத்துவமும்
   ii. நுண் நீர் முகாமைத்துவம்
   iii. வடிகால் அமைப்பும் அதன் முக்கியத்துவமும்
6. இலங்கையின் குடியேற்றத் திட்டங்கள் மற்றும் மகாவலித் திட்டம்
   i. குடியேற்றத் திட்டங்கள் அமைந்துள்ள இடங்கள்
   ii. மகாவலித் திட்டத்தின் கீழுள்ள பிரதேசங்கள்
7. நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் தொடர்பான அறிவு (Land Use Plan)
8. தேசப்படத்துடன் தொடர்புடைய அறிவு
   i. காற்றுவேகமானி, குறுமட்டமானி, தொலைநோக்கி அளவி (Theodolite)
   ii. 1 : 50,000 - 1 : 10,000 அங்குல வரைபடம் மற்றும் கடைசி திட்ட வரைபடம் தொடர்பான விபரம்
9. இலங்கையில் தற்போது காணப்படும் காணி மற்றும் அதனுடன் தொடர்புடையதாக காணப்படும் திணைக்களங்கள், நிறுவனங்கள் பற்றியத் தெளிவு
   i. காணி வகைகள் - அரச, தனியார், பரம்பரை
10. காணி அபிவிருத்தி மற்றும் காணிப் பகிர்ந்தளிப்பு தொடர்பான அறிவு
    i. தற்போது காணி அபிவிருத்தி மற்றும் காணி பகிர்ந்தளிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் தேசிய திட்டங்கள்
       - காணியற்றோரை இனங்காணல்
       - பிம்சவிய நிகழ்ச்சித் திட்டம்
       - ஒரு இலட்சம் காணித்துண்டுகள் பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித் திட்டம்
11. மன்னர் காலந்தொட்டு இன்று வரையில் காணி உரிமை வழங்கல் தொடர்பாக காணப்படும் ஆவணங்கள் பற்றிய தெளிவு
    i. சாசனம் (Royal Grant), குத்தகை, நிந்தகம், சுவர்ண பூமி, ரத்ன பூமி, ரன் பிம.

(இ) **மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையில் கால்நடை வள அபிவிருத்தி ஆலோசகர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக**

பதவிசார் தொழில்நுட்ப அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்பட்ட சுருக்க மற்றும் அமைப்புக் கட்டுரைகளையும் உள்ளடக்கிய வினாக்களையும் கொண்டதாகும்.

9. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை :**

யாதாயினும் விண்ணப்பதாரர் ஒருவர், பரீட்சையின் முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

10. **பரீட்சைக் கட்டணம் :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவு வைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல்

பயனுள்ளதாகும்.) பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்பட மாட்டாது.

11. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பங்கள் : A4 அளவிலான ஒரு தாளினை (செ.மீ. 21 x 29) (சாதாரண ஹாப் சீட்) பயன்படுத்தி

i. இலக்கம் 01 தொடக்கம் 03 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும்

ii. இலக்கம் 04 இலிருந்து மிகுதி வரையானவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பத்தினைத் தயாரித்தல் வேண்டும்.

iii. ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு பதவிக்கும் தனித் தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

iv. உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, முழுமையுறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். அறிவித்தலில் கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்குமாறு விண்ணப்பப்படிவம் தயார் செய்யப் படுவதனை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். இல்லையேல் விண்ணப்பமானது நிராகரிக்கப் படலாம். விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் அவசியமாகும்.

(ஆ) மாதிரி விண்ணப்பப்படிவத்தினை www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(இ) பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2019.10.04 ஆந் திகதிக்கு அல்லது முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கட்டுகஸ்தோட்டை வீதி,
கண்டி.

விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "மத்திய மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையிலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2019" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஈ) தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தின் இல. 13 இனை தமது திணைக்களத் தலைவரினால் சான்றுப்படுத்திய பின்னர் சமர்ப்பித்தல் அவசியமாகும்.

12. பரீட்சை நிலையங்கள் அமையும் இடம் பற்றி மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்று மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப் படும். அறிவிப்பு வெளியாகிய 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுபடுத்திய பிரதிகள், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு, மற்றும் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கான தொலைநகல் (பக்ஸ்) இலக்கத்தையும் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தை பெக்ஸ் மூலம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

13. பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல பரீட்சார்த்திகளும் அனுமதி அட்டையில் தங்களது கையொப்பத்தை சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும். கையொப்பத்தைச் சான்றுப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சைத் தினத்தன்று பரீட்சை மேற்பார்வை யாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

14. விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது ரூபா 2,40,360/- இற்கு கூடிய ஆண்டுச் சம்பளத்தை பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்த ரொருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

15. பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்குதல் என்பது அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதுதல் ஆகாது.

16. பரீட்சார்த்திகள் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதன் பொருட்டு கீழ்க் குறிப்பிடப் பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :
   (i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
   (ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

17. இவ்வறிவித்தலில் வெளியாகாத விடயங்கள் தொடர்பாக இறுதித்தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும்.

18. இவ்வறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

எம். ஜீ. ஏ. திலகரத்ன,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2019, செத்தெம்பர் 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐
(அலுவலக உபயோகத்திற்கு)

**மத்திய மாகாண அரசாங்க சேவையில் தொழில்நுட்ப சேவையிலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2019**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - S
தமிழ் - T ☐
ஆங்கிலம் - E
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)

நிரந்தர வதிவிட மாவட்டம்

கண்டி - 01
மாத்தளை - 02 ☐
நுவரெலியா - 03
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)

விண்ணப்பிக்கும் பதவி (உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)

விவசாய போதனாசிரியர் - AI
கால்நடை வள அபிவிருத்தி ஆலோசகர் - LDI ☐
குடியேற்ற உத்தியோகத்தர் - CO

*1.0*

*1.1* முதலெழுத்துக்களை இறுதியாகக் குறிப்பிட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் : ..............................................
..............................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் : உதா - PERERA, A.B.C.)

*1.2* முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ..............................................................
..............................................................................................................................

*1.3* முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..............................................................................
..............................................................................................................................

*1.4* தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

*2.0*

*2.1* நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ....................................................................
..............................................................................................................................
..............................................................................................................................

*2.2* நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ...............................................................................
..............................................................................................................................
..............................................................................................................................

*2.3* பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..............................................
..............................................................................................................................
..............................................................................................................................

*2.4* தொலைபேசி இல. : | | | | | | | | | | |

*3.0*

*3.1* பால் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

*3.2* பிறந்த திகதி : ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

*3.3* 2019.10.04 ஆந் திகதியில் வயது : வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

*4.0* நிரந்தர வதிவிட மாவட்டம் : ........................................................................

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம அலுவலர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

5.0. கல்வித் தகைமைகள் :

5.1 க. பொ. த. (சா.த.) பரீட்சையின் விபரங்கள் :

I. பரீட்சை ஆண்டும் மாதமும் : ............................................

II. சுட்டிலக்கம் : ............................................

III. பெறுபேறு :

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

5.2 க. பொ. த. (உ.த.) பரீட்சையின் விபரங்கள் :

I. பரீட்சை ஆண்டும் மாதமும் : ............................................

II. சுட்டிலக்கம் : ............................................

III. பெறுபேறு :

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

6.0. தொழில்நுட்பத் தகைமைகள் :

| நிறுவனம் | பூர்த்தி செய்துள்ள கற்கை நெறிகள் | கால வரையரை | பெற்றுள்ள சித்திகள் | சான்றிதழ் திகதியும் இலக்கமும் |
|---|---|---|---|---|
| | | | | |

7.0. ஏனைய தகைமைகள் : ....................................................................................................
....................................................................................................
....................................................................................................

8.0 தற்போது அரசாங்க சேவையில் பணிபுரிபவரின்

8.1 திணைக்களத்தின்/நிறுவனத்தின் முகவரி : ....................................................................................................
....................................................................................................

8.2 தற்போது வகிக்கும் பதவி : ....................................................................................................

8.3 சேவைக் காலம் : ..........................................................................................................

8.4 நிரந்தர மற்றும் ஓய்வூதியம் உரித்துடையவரா? அல்லது தற்காலிகமானவரா? : ................................................

9.0. நீங்கள் எப்போதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடவும்) ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடவும்.

.........................................................................................................................................
.........................................................................................................................................

10.0. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் விபரம் :

(i) பணம்செலுத்திய பிரதேச செயலகம் : ..........................................................................................

(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி : ....................................................................................

(iii) செலுத்திய தொகை : ..........................................................................................................

| பற்றுச்சீட்டைக் கழராதவாறு இங்கே ஒட்டவும் |
| --- |

11.0. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் விளைவாக அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானது எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

.................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : .................................

12.0. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................................................ என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ............................. ஆந் திகதி இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

................................,
உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்

திகதி : ................................

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ....................................................................

பதவி : ......................................................................................................................................

முகவரி : ....................................................................................................................................

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

13.0. அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையிலிருக்கும் விண்ணப்பதாரி எனின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

திரு./ திருமதி/ செல்வி ......................................................................................... அவர்களின் விண்ணப்பத்தை இத்தால் சமர்ப்பிக்கின்றேன். இவர் இவ் அமைச்சில்/திணைக்களத்தில் நிரந்தர/தற்காலிக/அமைய அடிப்படையில் சேவையாற்றுகிறார் எனவும் மேற் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படின் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் ஒப்புதல் அளிக்கின்றேன்

................................,
திணைக்களத் தலைவரின்/அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரது கையொப்பம்

திகதி ................................

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ....................................................................

பதவி : ......................................................................................................................................

அமைச்சு/திணைக்களம் : ......................................................................................................

09 - 646

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.